BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



படம்: தமயந்தி

Bergen Tamilsk Avis - no.09 - October 2021 - தேன்தமிழிதழ் - மாதஇதழ் - இல.09 ஐப்பசி 2021

நோர்வேயில் நூறாயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் (frivillige organisasjoner) செயல்பட்டு வருகின்றன.
விளையாட்டு முதல் சமய, சமூக, கல்வி, கலை, கலாசார மற்றும் அரசியல் பணிகளிலும் தன்னார்வத் தொண்டர்கள் பலர் மிகவும் துடிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றி வருகின்றனர். இந்நாட்டின் சகல துறைகளையும் தன்னார்வத் தொண்டர்கள் சிறப்பாய்ப் பாதுகாத்தும், முன்னேற்றியும் வருகின்றனர். இவ்வாறான தொண்டு நிறுவனங்களையும், தொண்டர்களையும் ஊக்குவிக்கும் முகமாக நோர்வே அரசு, நகரசபைகள், தனியார் நிறுவனங்கள் பலவும் அவர்களுக்குரிய கௌரவத்தையும், சிறு சிறு உதவிகளையும் புரிந்து வருகின்றது.

ஒவ்வொரு நகர சபைகளிலும் தன்னார்வ தொண்டர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு, அவர்களுக்கு இந்நாட்டின் பிரதமர் உட்பட மிகப்பெரும் தலைவர்கள் ஒன்றிணைந்து மரியாதை செலுத்துகின்றனர். அதுமட்டுமல்லாது தொண்டர்களுக்கான விருதுகளும் வழங்கி, அவர்களைக் கௌரவித்து ஊக்குவிப்பதனைக் காணமுடிகிறது.

அக்டோபர் இறுதி வாரத்தினை நாடு முழுவதாகவும் கலாசார வாரமாக அனுஷ்டித்து, கலை கலாச்சார பணிக்காய் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் சிறந்த தொண்டர்களைக் கௌரவிப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் சில தமிழர்களும் சிறந்த தொண்டர்களாக (frivillige arbeider) தேர்வுசெய்யப்பட்டு மதிப்பு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான மனித நேய நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்களும் சங்கங்கள், கழகங்கள், ஊடகங்கள், ஆன்மிகப் பணியகங்கள், அரசியல் குழுக்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் என பல வழிகளிலும் தன்னார்வ தொண்டாற்றி வருகின்றனர். ஆனால் இவ்வாறான பணிகளை ஆற்றிவரும் தமிழர்கள் சந்திக்கும் சவால்களும், இழப்புகளும், அவமரியாதைகளும் ஏராளம். எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் சந்திக்கின்ற மன உழைச்சல்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் அல்லது, தனிப்பட்ட முறையில் தொண்டாற்றும் எந்தத் தமிழனும் இங்கு நிம்மதியாக வாழ்வது என்பது மிகவும் கடினமானது. தன்னார்வத் தொண்டர்கள் எவருமே நமது தமிழச் சமூகத்தில் மதிக்கப்படுவதில்லை. மாறாக, மிதிக்கப்படுகிறார்கள் என்றே கூறலாம்.

புலத்தைப் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவருமே தமது சொந்த மண்ணை, உறவுகளைப் பிரிந்து, மேலை நாடுகளுக்கு வந்து கடுங்குளிரில் இரவு பகலாக வேலை செய்து, தமது குடும்ப வாழ்வை தக்க வைப்பதோடு, தாய்நாட்டிலும் அல்லலுறும் உறவுகளுக்கும் ஏராளமான உதவிகளைப் புரிந்து வருபவர்கள். இவற்றுக்கிடையில் பிறருக்காக, சமூகத்துக்காக, சமயத்துக்காக பணியாற்றுவது என்பது சமூக நலனுக்கான பொதுச் சிந்தனையுள்ள நல்மனம் கொண்டவர்களால் மட்டுமே இயலும். இவர்களை நீங்கள் கௌரவப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை, கல்லெறிவதை நிறுத்துங்கள்.









வாசகர்கள் தேன் தமிழிதழ் சந்தா செலுத்த.... வங்கிக் கணக்கு.

Bergen tamilsk avis
3626.26.77936
Spare banken vest

வருடம் 12மின் இதழ்கள் 200குரோணர்கள். அச்சுப்பிரதி- 300குரோணர்கள் தபால்செலவு உட்பட (நோர்வே).
மேலதிக விபரங்களுக்கு: யூலியஸ்
தொலைபேசி எண்: (47) 924 63 674

# சமாதானத்துக்கான நோபல் பரிசு 2021

## கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக







Maria Ressa
Born: 2 October 1963, Manila, Philippines

Dmitry Andreyevich Muratov
Born: 1961, Kuybyshev (now Samara), USSR (now Russia)

உலக சமாதானத்துக்கான நோபல் பரிசு பற்றிய தகவல்களினை கடந்த ஒக்டோபர் 8ஆம் நாள் நோபல் பரிசுத் தேர்வுக் குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

இம்முறை பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள பத்திரிகையாளரான மரியா ரெஸ்ஸா (Maria Ressa) மற்றும் ரஷ்ய நாட்டின் பத்திரிகையாளரான டிமிட்ரிஜ் முரடோவ் (Dmitrij Muratov) ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
உலக கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், ஜனநாயக பத்திரிகைச் சுதந்திரத்திற்காக பாடுபடுவதோடும், பத்திரிகை ஊடகவியலாளர்களின் பிரதிநிதிகளாகவும் இவர்களைக் கணிப்பதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மரியா ரெஸ்ஸா (Maria Ressa) அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெறும் வன்முறைகள், அதிகார துஷ்பிரயோகம், சர்வாதிகாரப் போக்குகளை அம்பலப்படுத்தி, மனித சுதந்திரத்துக்காகத் தனது கருத்துக்களைத் துணிச்சலோடு வெளிக்கொணரும் பெண் ஊடகவியலாளர் ஆவார். 2012ம் ஆண்டில் Rappler.com எனும் இணையத்தள ஊடகத்தினை ஆரம்பித்தார். சிலரது ஆட்சியில் சமூக வலைத்தளங்கள் ஊடாக பரப்பப்பட்ட தவறான பிரச்சாரங்கள், போதைப்பொருள் பாவனைகள் போன்ற நாட்டினைக் கெடுக்கவல்ல செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்.

டிமிட்ரிஜ் முரடோவ் (Dmitrij Muratov) அவர்கள் 1993 இல் "Novaja Gazeto" எனும் சுயாதீன பத்திரிகை ஒன்றினை ஆரம்பித்தார். கடந்த 25 ஆண்டுகளாக அதனது தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தவர். இவரது பத்திரிகை ரஷ்யாவின் சிறந்த பத்திரிகையாகப் பார்க்கப்படுகிறது. அந்நாட்டில் நடைபெற்று வரும் ஊழல்கள், வன்முறைகள், சட்டவிரோத கைதுகள், ரஷ்ய அரசின் அடக்கு முறைகள் அனைத்தையும் விமர்சிக்கும் பத்திரிகை எனவும் கூறப்படுகிறது. மனித உரிமையை பாதுகாக்கவும் அதனது முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், உலகிலுள்ள பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தைப் பேணவும் 2021ம் ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது என நோபல் பரிசுத் தேர்வுக் குழுவினருடைய அறிக்கை கூறுகிறது. □

# பெண் தலைமைத்துவம் கொண்ட பெண்களின் வாழ்க்கைப் போராட்டம்



**-ப்ரியமதா பயஸ்.** *(இலங்கை)*

உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள பெரும் நெருக்கடி ஒன்றை தனி மனிதராக நாம் எவ்வாறு எதிர்கொள்கின்றோம்? குழுக்களாக எவ்வாறு எதிர்கொள்கின்றோம்? அதே-நேரம் வலுவிழந்தோராக, இன்னும் அனாதரவானோராக, பெண்களாக, பெண் தலைமை குடும்பங்களாக எவ்வாறு எதிர்கொள்கின்றோம் என்று அலசி ஆராய்ந்தால் "மிக நெருக்கடி" என்ற பதம் மிக சரியாக பொருந்துகின்றது.

கொரோனா - என்கின்ற கொவிட்-19 வைரஸ் உலகின் அதிக சனத்தொகை கொண்ட சீனாவின் வுஹான் நகரில் தோன்றி உலகின் மூலை முடுக்கெங்கும் குடைந்து பரவி, உலகை உலுக்கிவருகின்றது.
இதற்கு அடுத்த கட்டம் - பொருளாதார நெருக்கடி, உணவுப்பொருள்கள் பற்றாக்குறை, தனிநபர் வருமானம் இழப்பு என சமூக நெருக்கடிகள் தலை விரித்தாடுகின்றன. அந்தவகையில் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் இந்த நெருக்கடியை மருத்துவ ரீதியில் துணிந்து எதிர்கொண்டாலும் பொருளாதார ரீதியில் மக்களை எதிர்கொள்ள வைக்க திண்டாடுகின்றது என்றே கூறவேண்டும்.

அந்தவகையில் பெண் தலைமைக் குடும்பங்கள் இலங்கையில் எவ்வகையான நெருக்கடி நிலைமை-களை சந்திக்கின்றனர் என்பது தொடர்பாக நாம் ஆராய முனைந்துள்ளோம் - பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவுக்கு அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளை சமூகம் கவனிக்க வேண்டும் என்பதும் உண்மையாகிறது.

குறிப்பாக இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் தனி நபர்களாக - அதாவது பெண் தலை-மை குடும்பங்களாக பெருவாரியான நெருக்கடியை சந்திக்கின்றனர். சிலர் தம் வல்லமையால் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, சில சமூக வாழ்வியல் நிலை-மைகளால் பல பெண்கள் நிர்கதி நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றமையை நாம் மறுத்துவிட விடமுடியாது.

உலகளாவிய ரீதியில் மூன்றில் ஒருவீதமான பெண், உடல் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு ஏனைய ஆண் சமூகத்தின் சிலரால் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதோடு, பல்வகையான நெருக்கடிகளை சந்திக்கிறாள். இது உலகளாவிய ரீதியில் 35 சதவீதத்தை வகிக்கிறது என்று உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்கு பின்னர் இலங்கையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே உள்ளது. இலங்கையில் தமிழர் சிங்களவர் என்ற இரு இனங்களுக்கிடையில் இடம்பெற்ற இன வன்முறை பல பெண்களை வாழ்க்கைத்துணை இழந்தவர்களாக ஆக்கியுள்ளது. இதில் பாரபட்சம் இன்றி இரண்டு சமூகத்தினரும் உள்ளடக்கப்பட்டிருப்பது கவலை தரும் விடயம்.

தமிழ்ப் பெண்கள் பலர் தமது கணவன்மாரை யுத்தத்தில் பலிகொடுத்து, இப்போதும் குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்களாக, பாரிய இன்னல்களை சுமக்கின்றனர். அதுபோல சிங்களப் பெண்களும் பலர் தமது கணவன் மாரை 30 வருட போரில் பலிகொடுத்து குடும்பத்தை தலைமை தாங்கி வழிநடத்துகின்றனர். இரு இனத்து பெண்களும் ஒரு நேரத்தில் இடம்பெற்ற போரில் கணவன்மாரை இழந்தாலும் சிங்கள இனத்து பெண்களுக்கு அரச ஓய்வூதியம் கிடைத்துக்கொண்டே இருக்கின்றது, அவர்களுக்கும் பிள்ளைகளுக்குமான வாழ்வாதாரத்துக்கு அரச இராணுவத்தின் இழப்பீடுகள், சலுகைகள் மற்றும் ஓய்வூதிய வசதிகள் அவர்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க உதவுகின்றன. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அத்தகைய இழப்பீடுகள் இல்லை என்பது மிக வருத்தமான உண்மை.

இழப்பீடுகள் எதுவுமற்ற நிலையில் இருக்கும் பெண்களின் வாழ்வியல், குழந்தைகளுடன் இருக்கும் இந்த நெருக்கடி நிலைமை சொல்லில் அடங்காதவை. என்னதான் பெண்சுதந்திரம், முற்போக்கு, நெருக்கடி தவிர்ப்பு என வாய் நிறையப் பேசினாலும் சமூகம் பெண்களுக்கான சில கதவுகளை இறுகப் பூட்டிவிட்டு சாவியை எங்கோ தூர எறிந்துவிட்டே நுனிநாக்கில் பல் வைத்து பேசிக்கொண்டிருக்கின்றது.

இங்கிலாந்து இராணியாக இருந்தாலென்ன அம்மனான சாமியாக இருந்தால் என்ன ஒருவித அடக்குமுறை வேர்விட்டுக்கொண்டே இருப்பதால் பெண்கள் வாழ்க்கையில் பலவகையான இன்னல்களைச் சந்திப்பது மறுக்க முடியாததாக உள்ளது. படித்த, உலகறிந்த பெண்கள் தனி மனுசியாக இந்த வாழ்க்கையை சவாலோடு கடந்தாலும், பல பெண்கள் இந்த சமூகத்தின் இடர்பாடுகளுக்குள்ளும், ஒடுக்குமுறைகளுக்குள்ளும் சிக்கி சின்னாபின்னமாகிக்கொண்டே இருக்கின்றனர். அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு தனக்காகவும் பிள்ளைகளுக்காகவும் வாழ விரையும் பெண்கள் ஒழுக்கம் என்ற அம்புகளால் ஒடுக்கப்படுத்தல் இன்றும் மாறாத பெரும் கறையாக இலங்கையில் இருக்கின்றது. இது எப்போது களையப்படுகின்றதோ அப்போதே பெண்களுக்கு விடிவு-காலம் என்பதைத் திரும்பத் திரும்ப எங்கள் சமூகத்தின் முகத்தில் ஓங்கி அறைந்தாற்போல் சொல்லவேண்டி இருக்கின்றது.

அந்த ஒரு வார்த்தைக்காக மட்டும் தமிழ் பெண்கள் பலர் தமது வாழ்வை சிதிலமாக்கிவிட்டு, பெண் தலைமைக் குடும்பங்களாக நடுத்தெருவில் நிற்பது மிகுந்த வேதனையும், சமூகத்தின் மீது கோபத்தையும் ஏற்படுத்துகின்றது. இவர்களின் உளவியல் என்பது தாங்கொணா நிலையில் இருப்பதை பலர் அறிய வாய்ப்பில்லை. ஒவ்வொரு பெண் தலைமைக் குடும்பத் தலைவிகளுடனும் பேசும்போது அவர்கள் மனம் திறந்தால் வெளிப்படும் வலிகள் மனித நேயம் உள்ள ஒரு மனத்தால் ஜீரணிக்க முடியாத மாபெரிய துக்கமாக இருக்கின்றது.

இப்படியான பல பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும், சுரண்டல்களுக்கும் ஆளாக்கப்படுவதால், இவர்களது குழந்தைகளின் கல்வி, எதிர்காலம் பாதிக்கப்படுவதோடு, இந்தக் குடும்ப அங்கத்தவர்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இந்த மன அழுத்தங்களிலிருந்து தம்மை மீட்டுக் கொள்வதற்காக இவர்கள் எடுக்கும் மகா பிரயத்தனங்கள் சொல்லி மாளாதவை.

இலங்கையில் 30 - 40 சதவீதமான பெண்கள் ஏதாவது ஒருவகையில் பாலியல் ரீதியலான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப் படுகின்றனர். இவர்களுள் 60 சதவீதமான பெண்கள் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு, தற்போதும் அதனால் ஏற்பட்ட மன அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை பெண்கள் தொடர்பான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்ப் பெண்கள், பெண் தலைமைதாங்கும் குடும்பங்களில் மிகுந்த நெருக்கடிகளைச் சந்திப்பதால் அவர்களுக்கான அமைப்புகளை உருவாக்கி அவர்களுக்கு உளவியல், பொருளாதாரம் தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கவேண்டிய சூழ்நிலை தற்போது அதிகரித்துள்ளது. இந்த பெண் தலைமை குடும்பங்களை வைத்துக் கொண்டு வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் பண மோசடிகளை செய்யக் கூடியவர்களும் அவ்வப்போது தங்கள் கைவரிசையை காட்டிக்கொண்டே இருக்கின்றனர். குறிப்பாக இதில் அதிகம் பாதிக்கப்படுவது, சிறுபான்மையினப் பெண்களாகவே இருப்பது மிக வருந்த தக்க விடயம் .

குடும்பச் சுமையைப் பொறுப்பேற்றுக் கொண்டு நகர்ப்புறங்களுக்கு வேலைத்தேடி வரும் பெண்கள், முதலில் சமூகத்தைக் காரணமாகக் கொண்டு ஒதுக்கப்படுவர். பின்னர் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாவர். வேலைத்தளங்களில், ஆண்களின் அதிகாரம் காரணமாக ஏற்படும் அழுத்தங்களால், வேலையை விட்டு விலக வேண்டிய நிலைமை ஏற்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆண்கள், தங்கள் தொழிலில் உயர்நிலை அடைவதை உயர்வாக மதிப்பிடுவதையும், பெண்கள் தங்கள் திறமைகளினால் உயர்நிலையை அடையும் போது அதனை கொச்சைப் படுத்துவதையும் சாதாரணமாகவே அவதானிக்க முடியும் இவற்றில் சில சகிப்புத் தன்மையை கடைபிடிக்கும் பெண்கள் பெரும்பாலும் பெண் தலைமைத்துவ கும்பப் பெண்களாகவே இருப்பார்கள். காரணம் தனது வாழ்வாதாரம் இது, இதை விட்டால் தாமும் தமது குடும்பமும் உணவுக்கே கஸ்டப்படும் நிலைமை வந்துவிடும் என்பதற்காக பல பெண்கள் தமது சகிப்பு தன்மையை அதிகமாக்கிக் கொண்டு இந்த வாழ்க்கைக்குள் நகருவதை காணமுடிகின்றது.

அந்தவகையில் இந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார, சமூக, மருத்துவ, மற்றும் சிறப்புநிலை பிரச்சனைகள் பலவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் அனுபவிக்கின்றனர்.

இத்தகைய பெண்கள் கடற்தொழில், விவசாயம், வியாபாரம், சிறுகைத்தொழில் என பலவகையான தோழி முயற்சிகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது இந்த தொழில் முயற்சிகள் சில பெண்களுக்கு நூறுவீதம் வெற்றியை கொடுத்தாலும் பல பெண்களுக்கு கைகூடவில்லை என்பது வருந்த தக்க விடயம் .

அந்த வகையில் ஒவ்வொரு பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பெண்களும் இவாறு தமது வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர் என்பது தொடர்பாக நாம் நேரடியான கருத்தாடலுக்குள் சென்று அவர்களின் நிலைமையை அவர்கள் மூலமே சொல்லவைக்க விளைகின்றோம். அடுத்த இதழில் பெண் தலைமைத்துவக் கும்பம் ஒன்றின் உண்மைச் சாட்சிகளோடும் வலிகளோடும், வடுக்களோடும், வாழ்க்கையோடும் நேரடியாக உங்களை....

(அடுத்த இதழில் சந்திப்போம்)



# இளம் தலைமுறைக்கான தலைமைத்துவம் சொல்லித் தந்த தந்தை அருட்பணி கரவையூர் செல்வம்

அருட்தந்தை செல்வரெட்ணம் (கரவையூர் செல்வம்) இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் புதிய உலகம் நிகழ்ச்சியின் ஆரம்பகால பொறுப்பாளராகவும் புதிய உலகம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய அருட்தந்தை அவர்கள் சிறந்த பேச்சாளரும், சிறந்த எழுத்தாளரும், உளநிதித் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவருமாவார். தமிழ்ப்புலமையும் தொடர்பாடல் அனுபவமும் நிறைந்தவரும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள சமுக ஆன்மீகத்துறைக்கு உழைத்து வருபவருமாகிய அருட்தந்தை அவர்கள் நோர்வே பேர்கன் மண்ணுக்கு வந்திருந்த வேளை...

சந்தித்து உரையாடியவர்: **விக்ரர் எதிர்வீரசிங்கம்**

**உளவியல் என்றால் என்ன? சிறிய விளக்கத்தைத் தரமுடியுமா?**

இது ஒரு பெரிய கேள்வி. சுருக்கமாகச் சொல்வதானால் உளவியல் என்பது மனித நடத்தையிலே நான் இதை ஏன் செய்கிறேன்? எதை எதனால் செய்கிறேன்? என்ற அடிப்படையிலேதான் நாம் உளவியலைப் பார்க்கிறோம். பிள்ளைகள் பெற்றோர் உறவு, பிள்ளைகள் ஆசிரியர் உறவு, நண்பர்கள் உறவு போன்றவற்றுள் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு எல்லாம் வெளியே காரணம் இல்லை. உள்ளேதான் காரணம் இருக்கிறது. அந்த அடிப்படையில் அகத்தே ஏற்படும் பிளவுகள் புறத்தே தோன்றும். இதிலே நாங்கள் ஏதாவது உதவி செய்ய வேண்டுமானால் செய்வோம்.

**இன்று புலம் பெயர் வாழ்வில் பெற்றோர் பிள்ளைகள் உறவில் அதிகளவிலான விரிசல்கள் தோன்றுகின்றன. இதற்குக் காரணமென்ன?**

இதற்குப் பெரிய விரிவுரையே கொடுக்க வேண்டிய கட்டம். ஏனென்றால் இதற்கு ஒன்றிரண்டு காரணங்களை சுட்டிக்காட்டுவது தவறாகும். எனது பார்வையில் பெற்றோர் பெரும்பாலும் எம்முடைய நாட்டிலிருந்து வந்தவர்கள் ஆகவே அந்நாட்டு கலாச்சாரம் பண்பாடு சூழலிலே பிறந்து வளர்ந்தவர்கள் ஆனால் அவர்களது பிள்ளைகள் இங்கு பிறந்து வளர்கிறார்கள் அல்லது அங்கு பிறந்து இங்கு வளர்கிறார்கள். இவர்கள் இரண்டு விதமான கலாச்சாரத்திலே வாழ்கிறார்கள். ஒன்று தமிழ்க்கலாச்சாரம் மற்றது நோர்வே கலாச்சாரம். இன்னும் சொல்வதானால் நோர்வேயில் பன்முகக்கலாச்சாரம் இருக்கிறது. பல நாட்டவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களோடு பழக்கங்கள், அவர்களது வாழ்க்கை முறை, ஊடகங்களினூடாகப் பெறும் அறிவு எல்லாம் முற்றிலும் வேறுபட்டது. ஆகவே சில முரண்பாடுகள் சில பிளவுகள் சில விரிசல்கள் வரத்தான் செய்யும் அதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**ஒரு பிள்ளை அல்லது ஒரு இளைஞன் பன்முறைக் கலாச்சாரத்துள் வாழும்போது அவன் பல்வகையான பிரச்சனைகளையும் நாடுகின்றான். இக்கட்டத்தில் அவனது பெற்றோர் எப்படியான புத்திமதிகளைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?**

முதலாவது பெற்றோர் இந்த பன்முறைக் கலாச்சாரம் என்பது என்ன? அவற்றுக்கும் எமது கலாச்சாரத்துக்குமிடையிலுள்ள தொடர்பு என்ன ஒற்றுமை வேற்றுமை என்பது என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் ஓரளவு படிக்க வேண்டும். இப்படிப்பட்ட நாட்டிலே

வாழ்ந்துகொண்டு வீட்டுக்குள்ளே இருந்துகொண்டு எங்கட கலாச்சாரம் பற்றிப் பேசக்கூடாது. எங்கட கலாச்சாரத்துக்கும் இங்குள்ள கலாச்சாரத்துக்கும் ஒற்றுமைகள் உண்டு அவை என்ன? வேறுபாடுகள் எல்லாம் கூடாதவை என்று சொல்ல முடியாது. தமிழ்க்கலாச்சாரமோ ஆங்கிலக் கலாச்சாரமோ அல்லது நோர்வேஜியக் கலாச்சாரமோ எந்தக் கலாச்சாரத்தை எடுத்துக் கொண்டாலும்சரி அது கலாச்சாரங்களில் ஆக்கும் சக்தியும் உண்டு அழிக்கும் சக்தியும் உண்டு. ஆக்கும் சக்கியினை நாம் வரவேற்றேயாக வேண்டும் அது எந்தக் கலாச்சாரத்திலிருந்து வந்தாலும் பறவாயில்லை. அழிக்கும் சக்தியினை நாம் மாற்ற வேண்டும். அதனைப் பெற்றோர் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் எப்படிப்பட்ட சூழலில் வளர்கிறார்கள் என்பது தெரியும். மேலெழுந்த வாரியாக சில ஊகங்களை வைத்துக் கொண்டு சில முடிவுகளை எடுப்பது நல்லதல்ல. அதிகமான பெற்றோர் தமது கலாச்சாரத்திலேயே வாழ்ந்துகொண்டு, தங்கட கலாசாரம் காப்பாற்றப்பட வேண்டுமென்று வீட்டுக்குள்ளயே அதைப் பேசிக்கொள்கிறார்கள். கடைகளுக்குப் போனாலோ அல்லது இங்குள்ள ரிவியைப் பார்த்தாலோ அல்லது பாடசாலைக்குப் போனாலோ இங்குள்ள கலாச்சாரத்தின் வெளிப்பாடுகள் தெரியும். சுற்றிவர இருப்பது வேறொரு கலாச்சாரம். வீட்டுக்குள்ளே மட்டும்தான் உங்களுடைய கலாச்சாரம். இதனைப் பெற்றோர் அறிந்து கொள்வது மட்டுமல்ல, நன்றாக உள்வாங்கிப் புரிந்துகொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும் அப்போ பிள்ளைகள் ஓரளவுக்கு புரிந்துகொள்வார்கள் ஏற்றுக்கொள்வார்கள். பெற்றோருக்கு ஒரு பாரிய பொறுப்பு உண்டு. அதாவது நாங்கள் எந்த நாட்டில் வாழ்கிறோம், அவர்களது கலாச்சாரமென்ன இந்த நாட்டின் கலாச்சாரம்கூட மாறிக்கொண்டே வருகிறது. பயங்கரமான மாற்றங்கள் சமுதாயத்திலே ஏற்பட்டு வருகின்றது. விஞ்ஞானத்திலே மாற்றங்கள், உளவியலிலே மாற்றங்கள் இப்படி எல்லாத் துறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது. இந்த மாற்றங்களுக்கேற்ப கலாச்சாரங்களிலும் மாற்றங்கள் ஏற்படும். நாங்கள் குறிப்பாக ஒரு நூற்றாண்டை வைத்துக்கொண்டு, இந்த நூற்றாண்டுக் கலாச்சாரம்தான் எமக்கு வேண்டும் என்று சொல்வது தவறு. இந்தக் கலாச்சாரம் ஒரு பரிணாம வளர்ச்சிக்குள் போய்க்கொண்டிருக்கிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப நாங்கள் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப எம்மை நாங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**இருப்பினும் இங்குள்ள பெற்றோர் எமது கலாச்சாரத்தினூடாக, கலைகளினூடாக பண்பாடுகளினூடாக நாங்கள் எமது அடையாளங்களைத் தக்கவைக்க வேண்டுமென்று பிள்ளைகளுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்தில் பிள்ளைகள் மாற்றுக் கருத்தைக் கொண்டுள்ளார்கள் அதாவது நாங்கள் இந்தமண்ணில் பிறந்தவர்கள் வேறு கலாச்சாரத்துள் வாழ்கிறோம் என்று பிள்ளைகள் பெற்றோருக்கு தமது விவாதங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்தில் நீங்கள் எப்படியான கருத்தைக் கூறுவீர்கள்?**

இது ஒரு நல்ல விவாதம் நல்ல உரையாடல். இந்தமாதிரியான உரையாடல் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் அவசியம் தேவை. உரையாடல் ஒன்றை ஒன்று திணிப்பதல்ல. பிள்ளைகள் சொல்வதிலும் உண்மை இருக்கு. பெற்றோர் சொல்வதிலும் உண்மை இருக்கு. இங்கு வந்து இருந்துகொண்டு நாங்கள் யாழ்ப்பாணத்தில் அப்படி வாழ்ந்தோம் மன்னாரில் இப்படி வாழ்ந்தோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பது நல்லதல்ல. ஆனால் எமக்கென்று தமிழனுக்கென்று சில அடையாளங்கள் உண்டு சில பாரம்பரியங்கள் உண்டு. ஆனால் பாரம்பரியங்கள் எல்லாம் நல்லவையுமல்ல. அதையும் குறிப்பாக சொல்ல வேண்டும். முதலில் சொன்னேன் கலாச்சாரங்களில் நல்லவையும் உண்டு தீமையுமுண்டு. நல்லதை வளர்ப்பபோம் தீயதை விட்டுவிடுவோம். இன்றைக்கு புலம்பெயர் மக்கள் சில சடங்குகளைக் கொண்டாடும் முறையைப் பார்த்தால் வெட்கமா இருக்கு. அது கலாச்சாரமல்ல அது ஒரு பழக்கவழக்கம். அதுக்குப்பின்னால் ஒரு வரலாறு உண்டு. அதுக்குப்பின்னால சில நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை எல்லாம் இன்றைய அறிவியலுக்குப் பின்னால் தவிடுபொடியாப் போச்சு. ஆனால் நாங்க அதைப் புடிச்சு வைச்சுக்கொண்டிருக்கிறம். உதாரணமா சாமத்தியச் சடங்கை எடுத்துக்கொள்ளுவோம். ஏன் இப்பிடி ஒரு கொண்டாட்டம் வைக்கிறீங்க? அதை இளைஞர்கள் எதிர்க்கிறார்கள். அது ஒரு பருவ வளர்ச்சி. அதுக்கு நீங்கள் என்னவோ எல்லாம் செய்யிறீங்க. அதைக்கலாச்சார ரீதியாக அணுகக்கூடாது உளவியல் ரீதியாக அணுகவேணும். நாங்க அப்பிடி செய்யிறதில்ல. உளவியல் ரீதியாக அணுகாமல் மற்ற எல்லா விதமாகவும் அணுகுகிறோம். அப்போ அந்தப் பிள்ளைகள் சொல்வது சரி. அந்தப் பிள்ளைகள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறோம். என்னுடைய மருமகள் ஒருத்தி சிரித்தாள் இந்த விடயத்தைப்பார்த்து. ஆகவே கலாச்சாரமென்ன அந்தக் கலாச்சாரம் எதற்கு அந்தக் கலாச்சாரத்தில் நாங்கள் வளர்கிறோமா? அது நமது வளர்ச்சிக்கு உதவி செய்கிறதா? இதனைப்பாத்து உதவி செய்கிற கலாச்சாரத் தன்மைகளை எடுத்துக்கொண்டு மிகுதிய விட்டேயாகவேணும். எங்கட நாட்டில இல்லாத பழக்கங்கள இங்க நீங்க

உருவாக்கி வச்சிருக்கிறீங்க அது எங்கட கலாச்சாரம் என்று சொல்லி. எங்கட காப்பியங்கள் உண்டு இலக்கியங்கள் உண்டு அதெல்லாம் மாறாது. அதை நாங்கள் காப்பாற்ற வேண்டும். அதுதான் எங்கட அடையாளம். வெளிச்சடங்குகள் அல்ல. சாறி உடுத்துவது கலாச்சாரமல்ல. கலாச்சாரத்துக்கு அடிப்படையாக இருப்பது மாறக்கூடாது. விருந்தோப்பல் பண்பு எங்கட கலாச்சாரம். யாதும் ஊரே யாவரும் கேளிர் எங்கட கலாச்சாரம். முதியோரை மதித்தல் எங்கட கலாச்சாரம் அது மாறக்கூடாது. ஆகவே எது மாறலாம் எது மாறக்கூடாது என்பது முதலில் தெளிவாகணும். சிலவை மாறக்கூடாது அது எமது தனிப்பட்ட அடையாளம். தமிழருடைய தனிப்பட்ட அடையாளம் என்ன? காப்பியங்களிலே இருக்கு இலக்கியத்திலே இருக்கு அது காலாகாலமாக வந்துகொண்டே இருக்கு. எங்கட சங்கீதத்திலே இருக்கு, எங்கட நாடகங்களிலே இருக்கு, எங்கட நாட்டியங்களிலே இருக்கு, எங்கட இசையிலே இருக்கு அதுதான் உண்மையான கலாச்சாரம். மற்றது புறம். வெளிச்சடங்குகள். ஆகவே எதை நாங்கள் காப்பாற்ற வேண்டும் எதை காப்பாற்றக்கூடாது என்பதைப் பகுத்தாய்வது நமது கடமை.

**புலம்பெயர் நாடுகளிலே ஒரு பிள்ளையை வளர்ப்பதிலே பெற்றோர் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள். ஒவ்வொரு படிகளிலும் அதாவது குழந்தைப் பருவத்தில் ஒருவகையான பிரச்சனை, சிறுபிள்ளைப்பருவத்தில் ஒருவகையான பிரச்சனை , இளவயதில் சுமக்கமுடியாத பிரச்சனையை பெற்றோர் அணுகுகின்றார்கள். இந்த இடத்தில் ஒரு உளவியல் துணையாளர் என்ற வகையில் எவ்வாறான அறிவுரையைத் தருகிறீர்கள்?**

நல்லொரு கேள்வி. இப்போ, வெளிநாடுகளிலெல்லாம் பிள்ளை வளர்ப்புப்பற்றி பெற்றோர் படிக்கிறார்கள். எங்களுடைய பெற்றோரைக் குறைகூற முடியாது. அந்தநேரம் இந்த அறிவு அங்கு இருக்கவில்லை. இப்பதான் இந்த அறிவு வருகிறது. இது அண்மைக்காலத்து அறிவு. இதில்தான் பிள்ளைகளின் பருவவளர்ச்சி பற்றி தரப்படுகிறது. பெற்றோர் இதனை அறிந்து வைத்திருப்பது அவசியம். அப்போதுதான் பிள்ளைகளை ஓரளவாவது புரிந்து கொள்ளலாம். அடுத்தது பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாக இருந்து பேசக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். என்னுடைய வளர்ச்சியிலே ஏற்படுகின்ற மாற்றங்களைப்பற்றி பேசவேண்டும். மற்றது பெற்றோர் பிள்ளைகளுக்கு செவிமடுக்க வேண்டும். பிள்ளைகள் சொல்வதைக் கேட்கவேண்டும். எங்களுடைய பெற்றோர் பிள்ளைகள் சொல்வதைக் கேட்பது குறைவு. அவர்கள் கூடுதலாக அறிவுரைதான் சொல்வார்கள். நீங்கள் ஆழமாக செவிமடுத்தால் என்ன சொல்ல வேண்டுமென்பது தானாக வரும். இது என்னுடைய உளவியல் துணைவளத்தில் நான் பெற்றுக்கொண்ட பெரிய அறிவு. எனவே "உரையாடல்" என்ற ஒரு சூழ்நிலை குடும்பத்தில் இருந்தால் பிள்ளைகள் பெற்றோரை நம்புவார்கள். தங்களுக்கு ஒரு பிரச்சனை வந்தால் வெளியால யாருடனும் பேசாமல் பெற்றோருடன் பேசுகின்ற சூழலை நிட்சயமாக உருவாக்க முடியும். அதுக்கு நேரம், காலம், நல்ல சூழல் வேணும். இது நமக்குக் கிடையாது. இதனை நாம் உருவாக்கிக் கொண்டால் பல பிரச்சனைகளை இலகுவாக அணுகலாம்.

**இன்றுள்ள பிள்ளைகள் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே தெரிவுசெய்கிறார்கள். அதிலே இங்குள்ள பழக்கத்தின்படி திருமணத்துக்கு முன்பு ஒருசில ஆண்டுகள் ஒன்றாக இருந்து ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டுவிட்டு திருமணம் முடிக்க விரும்புகின்றார்கள். இவ்விடயம் பெற்றோருக்கு மிகப்பெரிய மனச் சங்கடத்தினைக் கொடுக்கிறது. இதுதொடர்பாக உங்கள் கருத்தென்ன?**

இது ஒரு கஸ்ரமான கேள்வி. இதுகலாச்சாரம் மட்டமல்ல மத ஒழுக்கங்களும் இதற்குள் வந்திரும். இன்றைக்கு எங்களுடைய நாட்டிவேயே காதல் திருமணங்கள்தான் கூட. பேசிச்செய்வது மிகமிகக் குறைவு. அதனால பேசிச்செய்யும் திருமணங்கள் கூடாதென்று கூறவரேல்ல, காதற் திருமணங்கள் நல்லதென்றும் சொல்லவரேல்ல. இரண்டு பக்கங்களிலும் தவறுகள் ஏற்பட்டிருக்கு. விவாகரத்துக்களும் ஏற்பட்டிருக்கு. ஆனால் பிள்ளைகள் தாங்களே தங்கள் துணையை தேடவேண்டுமென்று சொல்வதும் ஓரளவு நியாயம். அவர்கள் தெரிவுசெய்தால் அதில வாற தவறுகளுக்கும் விளைவுகளுக்கும் அவர்கள்தான் பொறுப்பு பெற்றோர் பொறுப்பல்ல.

அதையும் அவர்கள் உணரவேண்டும். ஆனால் நீங்கள் சொன்ன கடைசிப்பிரச்சனை வேறு. திருமணத்துக்கு முன் ஒன்றாக இருக்கவேண்டுமென்பது வெளிநாடுகளில் உருவாகிய பழக்கம். இது அவர்களது கலாச்சாரமல்ல. இந்த பழக்கத்த திருச்சபை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாமைக்குப் பல காரணம் உண்டு. பாலியல் மட்டும் காரணமல்ல. அதாவது ஒரு குழந்தை பிறந்தால் அந்தக்குழந்தையின் எதிர்காலம் என்ன? இவ்வாறான விடயங்கள பெற்றோரும் பிள்ளைகளும் இருந்து கதைத்து உரையாடித்தான் தீர்க்கலாம். உரையாடும் போது பெற்றோரும் பிள்ளைகளும் நண்பர்களாக உரையாடவேண்டும். உரையாடலுக்கு சமத்துவம் அவசியம்.

# எல்லாத் தரப்பாலும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுவரும் அப்பாவி மக்கள்



*கடந்த நல்லாட்சி அரசாங்கமும், அதன் தமிழ்த்தரப்புக் கூட்டாளிக் கட்சிகளும் அதிகாரத்தில் கோலோச்சிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஏழைப்பட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில், குட்டிச் சுவர்களாக உள்ளன.*
*வடக்கு கிழக்கு, தீவகம் என தமிழ்ப்பிரதேசங்கள் அடங்கலாக இந்த அவலமான நிலை காணப் படுகின்றது.*
*தமிழ் அரசியல்த் தரப்பாலும், அப்போதைய இவர்களது கூட்டு அரசாங்கத்தாலும் தாம் வஞ்சிக்கப்பட்டதாக இந்த மக்கள் நம்புகிறார்கள். இந்தச் சனங்களின் மேற்படி கூற்றுக்குச் சாட்சியங்களாக வடக்கு, கிழக்கு, தீவகப் பிரதேசங்களில் இந்தத் வீட்டுத்திட்டங்கள் குட்டிச் சுவர்களாக சிதைந்து நிற்பதை நாம் வெளிப்படையாகவே காண முடிகின்றது.*

*இது தொடர்பில் இந்த அரசாங்கமோ, அரசாங்கம் சார்ந்த பிரதிநிதிகளோ எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்ற விசனத்தையும், இனி வரப்போகும் மாரிகால வெள்ளத்துக்குள் குழந்தைகுட்டிகளுடன் தாம் பெரும் அவல நிலையை எதிர் கொண்டிருப்பதாகவும் வுவணதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குள் அமைந்துள்ள மகிழவட்டவான் மற்றும் நரிப்புல் தோட்ட கிராம மக்கள் தமது குமுறல்களை வெளிப் படுத்தியிருக்கின்றார்கள். இந்தப் பதிவுகள் அடங்கிய வீடியோக் காட்சிகள் மட்டு-நேறள பதிவாக பொதுவெளிகளில் பகிரங்கப் படுத்தப்பட்டு வருகின்றபோதும் இதுவரை எந்த அரச அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிக்கவில்லை என அறிய முடிகின்றது. கடந்த நல்லாட்சி அரசாங்கமும், அதன் தமிழ்த்தரப்புக் கூட்டாளிக் கட்சிகளும் தம்மை ஏமாற்றி விட்டதாகவே பகிரங்கக் குற்றச்சாட்டை இந்த மக்கள் வெளிப் படுத்தியிருக்கிறார்கள்.*

*இதேபோல் பல பின் தங்கிய கிராமங்களின் சனங்கள் தாம் தமது தமிழ்த் தலைமைகளால் ஏமாற்றப் பட்டிருப்பதாக நம்புகிறார்கள்.*
*இப்படி அரசாலும், அதிகாரிகளாலும், தமிழ்த் தலைமைகளாலும் வஞ்சிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட இன்னும் சில கிராமங்களின் ஆதாரங்களை நாம் காண முடிந்தது.*
*அவற்றில் ஒன்று தீவகத்தில், கரம்பொன் தெற்கில் உள்ள மெலிஞ்சிமுனைக் கிராமமாகும்.*

*மேற்படி கிராமத்தில் நிரந்தர வீடற்ற 25குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 2018இல் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை ஊடாக வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. அப்போதைய இந்த வீட்டுத்திட்டத்தின் பெறுமானம் தலா 5லட்சரூபாய்கள் எனத் திட்டமிடப் பட்டிருந்தது. ஒரு சில குடும்பங்களுக்கு மட்டும் 40ஆயிரத்திலிருந்து 1லட்சம்வரை வழங்கப் பட்டிருக்கின்றது. இந்த மக்களும் அரசு கட்டாயம் உதவும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு குடும்பமும் பல லட்சங்களை வட்டிக்கும், ஈடு வைத்தும் கட்டுமான வேலைகளைச் செய்தார்கள். இப்போ அரசும் எந்தவித உபகாரமும் செய்யவில்லை, வீடுகளும் கட்டி முடிக்கப்படாத குட்டிச் சுவர்களாக நிற்கின்றன. குடியிருக்கவே வீடற்ற மக்கள் இப்போ பல லட்சங்களுக்குக் கடன் காரர்களாகவும் கைவிடப் பட்ட நிலையில் தவித்து நிற்கிறார்கள்.*
*அரசோ, தமிழ்த் தலைமகளோ இந்த மக்களின் நிலையைக் கொஞ்சமேனும் ஏறெடுத்துப் பார்ப்பார்களா?*

## நாடளாவிய ரீதியில்...

# ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுக்கு எதிரான போராட்டங்கள்



இலங்கையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுக்கு எதிரான போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் அதிகரித்திருக்கின்றன. பொருளாதார அரசியல் நெருக்கடியை இலங்கை அதிகளவில் சந்திக்கும் இந்த கால கடத்தில் அரசுக்கு எதிரான போராட்டங்களும் நாட்டில் வலுப்பெற்றுள்ளன.

கொரோனா பெருந்தொற்றுடன் சேர்ந்து கடன் சுமையிலும் இலங்கை பெரும் சிக்கல்களை சந்திக்கின்றது. 2022ஆம் ஆண்டு 1.5 பில்லியன் டொலர்களும் 2023ஆம் ஆண்டில் 1.25 பில்லியன் டொலர்களும் திருப்பிச் செலுத்த வேண்டிய நிர்பந்தத்தில் இலங்கை உள்ளது.

இதன்காரணமாக அனைத்து விடயங்களிலும் படுதோல்வியடைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, ஆட்சியை தங்களிடம் ஒப்படைத்துவிட்டு உடனடியாக வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ போர்க்கொடி தூக்கியுள்ளார்.

நாட்டுக்கு பெரும் பலத்தைத் தரும் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலையில் உள்ளனர். இளைஞர்களைப் பாஸ்போர்ட் வரிசையில் இழுத்து இளைஞர்களின் வாழ்க்கையுடன் அரசு விளையாடுகின்றது.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இருக்கும் இளைஞர் சமுதாயம் ஏமாற்றமடைந்து, அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியானால் இந்த நாடு என்னவாகும்? எவருக்கும் தீங்கு விளைவிக்காமல் தமது பலத்தால் இந்த நாட்டுக்கு உணவு வழங்கிய விவசாயிகளை அரசு படுகுழிக்குள் தள்ளியுள்ளது எனவும் அவர் கொதித்தெழுந்துள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் உரப் பற்றாக்குறையை முன்நிறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

குருநாகல் தேர்தல் தொகுதியின் வெல்லவ பிரதேசத்தில் விவசாயிகளும் எதிர்க்கட்சியினரும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

“நாட்டுக்கு அரிசி வழங்கும் விவசாயிகள் வீதியில்” எனும் கருப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அசோக அபேயசிங்க மற்றும் ஜே.சி.அலவதுவல ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இதனைவிட அண்மையில்அதாவது ஒக்ரோபர் 17ஆம் திகதி முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரையிலிருந்து காலை 7.15 மணியளவில் ஆரம்பித்து கடல் வழியான கண்டனப் போராட்டம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை துறைமுகத்தை காலை 9.30 மணியளவில் சென்றடைந்தது.

இழுவை மடி மீன்பிடி முறை, கடற்தொழில் மற்றும் நீரியல்வள சட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டதிருத்தத்தின் பின்னர் முற்றாக தடை செய்யப்பட்டிருந்தாலும் அது நடைமுறையில் இன்னமும் முழுமையாக செயற்படுத்தப்படாதுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் றோலர் மீன்பிடி முறையின் காரணமாக வடக்கு மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்களுக்கு நீதி கோரி கடல்வழியாக இந்த கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



இந்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிறீதரன், சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதனை விட விவசாயிகளின் தற்காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கோரி வடக்கு கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதில் ஓர் அங்கமாக வலி.கிழக்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புத்தூர் மற்றும் உரும்பிராய் கம நல சேவை நிலையங்கள் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வெங்காய இறக்குமதியை முற்றாகத் தடை செய், விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசிகளை போதியளவு கிடைக்க வழி செய், உருளைக்கிழங்கு அறுவடை காலத்தில் உருளைக்கிழங்கு இறக்குமதியை தடை செய் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல் விவசாயத்திற்கான உரத்தினை வழங்குமாறு கோரி வவுனியா இலுப்பையடிப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலுப்பையடிப்ப குதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநலசேவை நிலையம் மற்றும் பம்பைமடு, நெடுங்கேணி, கனகராஜன்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களிற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஆயித்தியமலை, கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முன்னால் உரத்தை வழங்குமாறு கோரி விவசாயி-கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச விவசாயிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் கம நல சேவை நிலையங்கள் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விவசாயச் செய்கைக்குத் தேவையான உரத்தை பெற்றுத்தருமாறு கோரி, ஐக்கிய விவசாயிகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் விவசாயிகள், அநுராதபுரம், குருநாகல் பிரதான வீதி, ஸ்ரவஸ்திபுர சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலான வாசகங்கள் உள்ளடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உரத்தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விவசாயிகளை பாதுகாக்குமாறு வலியுறுத்தியும் நாடாளுமன்றத்துக்குள் 22 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டன. ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள், பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் பங்கேற்றனர்.

இதனை விட மட்டக்களப்பு, வாகரையில் சிங்களக் குடியேற்றத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காராமுனை பகுதியில் சிங்கள மக்களை குடியேற்ற முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு எதிராக அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.
காராமுனை பகுதியில் 1982 ஆம் ஆண்டுக்கு முன்பாக சிங்கள மக்கள் குடியிருந்ததாக கூறி அவர்களுக்கான நடமாடும் சேவையொன்று நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையினை மத்திய காணி ஆணையாளர் ஜி.கீர்த்தி கமகே மற்றும் கிழக்கு மாகாண உதவி காணி ஆணையாளர் ஜி.ரவிராஜன் ஆகியோர் இணைந்து நடாத்தியிருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் 1982ஆம் ஆண்டுக்கு முன்பாக வசித்ததாக தெரிவிக்கப்படும் சிங்கள மக்களின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கான காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.
இந்த நிலையில் அப்பகுதிக்கு சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையிலான குழுவினர், குறித்த செயற்பாடுகள் தொடர்பில் தமது கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதன்போது அப்பகுதிக்கு பெருமளவான காவல்துறையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த போதும் குறித்த காணி நடமாடும் சேவைக்கும் சிங்கள குடியேற்றத்திற்கும் கடும் எதிர்ப்பு அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் எதுவித குடியேற்றமும் செய்யப்படாது எனவும் காணி ஆவணங்களை மட்டும் பரிசோதனைகள் செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்க நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் காணி ஆணையாளரினால் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் உறுதியளிக்கப்பட்டது. □

# எனது தோழி

-பானுபாரதி-



முதலாவது தூறல்
என் உச்சியை நனைத்தபோது
வானத்தை அண்ணார்ந்து பார்த்தேன்

நிலவின் கம்பிகளற்ற
சாளர நிலையில் குந்தியிருந்து அவள்
வெற்றிலை குதப்பிக்கொண்டிருந்தாள்

கையில்
கறுப்புக் குதிரையின் வால் மயிரில்
சீனச் சமுத்திரத்தின் கறுப்பு முத்துக்களை
மாலை கோர்த்துக்கொண்டிருந்தாள்.

இன்னொரு துமியும் விழக்கூடுமென
அண்ணார்ந்தபடியே நின்றிருந்தேன்

திறந்த சாளரம் திறந்தபடியே கிடக்க
வெள்ளை முகிலுக்குள்
மறைந்து கொண்டது நிலவு.
அல்லது
நிலவையும் அவளையும்
மூடி மறைத்தது வெள்ளை முகில்.

விலகும்வரை காத்திருந்தேன்.
விடிபொழுது நெருங்கும்போதே
விலகிக்கொண்டது வெள்ளைமுகில்

நிலவையும் காணோம்
நிலவின்
கம்பிகளற்ற சாளரத்தின் நிலையையும் காணோம்
அதிலமர்ந்திருந்த அவளையும் காணோம்.

என்னெதிரில் படுத்திருந்த சமுத்திரம்
கொந்தளித்துக்கொண்டிருந்தது
நிலவறுந்து,
நிலவோடு கம்பிகளற்ற சாளரமுமறுந்து
சமுத்திரத்தில் விழுந்து கிடந்தன.
அவற்றோடு அவளும்.

அவள் கையில் கோர்த்துக்கொண்டிருந்த
சீனத்துக் கறுப்பு முத்துக்கள்
வானப்பரப்பெங்கும்
நட்சத்திரங்களாய் சிதறிக்கிடந்தன

வடக்கிலும் தெற்கிலும்
கிழக்கிலும் மேற்கிலுமிருந்து
கைகளிலேந்திய கொக்கச் சத்தகங்களுடன்
படையெடுத்து வந்து கொண்டிருந்தனர்
கலாச்சாரக் காவலர்கள்
நட்சத்திரங்களையும் அவளையும்
அறுத்து சமுத்திரத்தில் வீழ்த்தவென....

கொந்தளிக்கும் அலைகளிலிருந்து
அவள்
புதிய
ஆழிப்பொன் முத்துக்களுடன்
எழுந்து வந்துகொண்டிருந்தாள்.

(அவள் தனது கரையிலமர்ந்திருந்து
கலாச்சாரக் காவலர்களின் நரம்பறுத்து,
ஆழிப்பொன் முத்துமாலை
கோர்த்துக்கொண்டிருப்பதாகக் கிடைத்தது
பிந்திய சங்கதி)

# காற்றில் உங்கள் குரலைக் கேட்கிறேன்

-தமயந்தி.



ஒரு இனத்தின் அடையாளங்களை, பாரம்பரிய நினைவுச் சின்னங்களை, வரலாற்றுத் தடையங்களை, அறிவுசார் கூடங்களை அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும் இருக்கும் இன்னொரு பெரும்பான்மை இனம் அழிப்பதென்பது எமது தேசத்தைப் பொறுத்தவரை சாதாரண நிகழ்வெனக் கடந்தகாலங்கள் எங்களுக்கு முகத்திலறைந்து சொல்லித் தந்திருக்கின்றது. இதற்குப் பல சான்றுகளைச் சொல்ல முடியும். யாழ்.நூலக எரிப்பில் தொடங்கி, 2009இற்குப்பின் போராளிகளின் நினைவுஸ்தூபிகளை அழித்தது வரையெனப் பல எடுத்துக் காட்டுக்களை முன் வைக்க முடியும். ஒவ்வொரு தமிழ் அரசியற் தரப்புக்களும் அப்போது தமது எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் முன்வைத்த போதும், எந்தவித தீர்வுகளும் இல்லாமல் எல்லா எதிர்க்குரல்களும் காற்றில் மங்கிப்போனது.
இன்னொரு பக்கம், இதே தமிழ்த் தலைமைகள் அதிகாரங்களுக்குத் துணைபோன சம்பவங்களையும் நாம் மறந்துவிட முடியாது.

34வருடங்களுக்கு முன் இதே மாதத்தில் (10.10.1987) இந்திய அமைதிப்படை தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. யாழ்.கோட்டையில் நிலை கொண்டிருந்த இந்தியப் படை யாழ் நகரப் பகுதியின் மீது கண்மூடித்தனமான எறிகணைத்




தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும் நடாத்தி தனது பங்கிற்கு தமிழ் மக்களைக் கொன்று தள்ளியது. வீடுகளுக்குள் புகுந்து விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளையிட்டதோடு, பெண்கள் மீதான பாலியல் வதைகளையும் செய்தது. மக்களை வீதியில் நிரையாகப் படுக்கவிட்டு கவச வாகனங்களால் நெரித்துக் கொன்றது. இவை எல்லாவற்றுக்கும் உச்சமாக, 1987ஒக்டோபர் 21ஆம் திகதி மாலை 4.30மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் புகுந்த இந்தியப்படை, அங்கு கடமையிலிருந்த 3வைத்தியர்கள், 4செவிலியர்கள் உட்பட 21 ஊழியர்களையும், 46நோயாளர்களையும் சுட்டுக் கொன்றது. (இந்த வேளையில் அவர்களையும் இங்கு நினைவு கொள்வோம். 43ஆம் ஆண்டு நினைவஞ்சலி)



இத்தனை அட்டூழியங்களை எமது தேசத்தில் செய்துமுடித்த இந்தியப்படைக்கு 2016ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நினைவாலயம் கட்டித் திறக்கப் பட்டது. எமது தமிழ்த் தலைமைகள் பல இந்தத் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு அகவணக்கங்கள் செய்தார்கள். எந்தவித எதிர்ப்புக் குரலும் எழுந்ததாக இதுவரை கேள்விப்பட்டதில்லை.



*2016இல் கனடாவில் ஒரு நினைவிடத்தைப் பார்க்கக் கிடைத்தது. அதனைப் பதிவு செய்யும் நோக்கமாகவே இந்தக் குறிப்பை எழுதத் தொடங்கினேன். ஆனால், தவிர்க்கமுடியாமல் எமது தேச நிலமைகளையும் இங்கே நினைத்துப் பார்க்க வைத்து விட்டது.*

*2016 ஒக்டோபர் கனடா சென்றிருந்தபோது "நீ கட்டாயம் பார்க்க வேண்டிய இடம் வா" என மறைந்த ஓவியர் கருணா வின்சென்ற் அழைத்துச் சென்ற இடத்தை விட்டு அகல மனதின்றித் தவித்தேன்.*

*உலகின் மிகப்பெரும் இனப்படுகொலை நடந்த பிரதேசம். பூர்வகுடிகளான மிசசாகா இனத்தை அடி வேரோடு அறுத்தெறிந்த தேசம். அந்த மேட்டில் குத்த வைக்கப்பட்டுள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ள Iroquois பூர்வ மக்களின் பிரார்த்தனை உயிர்க்குலையை அப்படியே இழுத்து வெளியே போட்டது.*

*பெலாமி லாரன்ஸ் சந்திப்பிலுள்ள ராபர் ஹில் (Taber hill) பூங்காவில் வைக்கப்பட்டுள்ள நினைவுக் கல்லில் (பூர்வ குடிகளின் Iroquois இனத்தவர் இறந்தவர்களது உடல்களைப் புதைக்கப் பயன்படுத்திய இடுகாட்டில்) பொறிக்கப்பட்டுள்ள பிரார்த்தனை நண்பர் என்.கே.மகாலிங்கம் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாக கருணா சொன்னதுடன், அதன் பிரதியொன்றையும் எடுத்துத் தந்தார்.*


*அந்தப் பிரார்த்தனையின் தமிழாக்கத்தைத் தேன் தமிழிதழ் வாசகர்களுக்காக இங்கே பதிவாக்குகிறேன்.*

### ஓர் இரேக்குவா பூர்வீக மக்களின் பிரார்த்தனை

*ஓ என் பெரும் ஆன்மாவே!*
*காற்றில் உங்கள் குரலைக் கேட்கிறேன்.*
*உங்கள் மூச்சு*
*முழு உலகுக்கும் உயிரைத் தருகிறது.*

*நான் சொல்வதைக் கேளுங்கள்.*
*உங்கள்முன் நிற்கும் நானும் ஒரு மனிதன்.*
*உங்கள் குழந்தைகளில் நானும் ஒருவன்.*
*நான் சிறியவன், பலவீனமானவன்- அதனால்*
*உங்கள் பலமும் ஞானமும் எனக்குத் தேவை.*
*இவ்வுலக அழகுள் என்னை நடக்க விடுங்கள்.*
*என் கண்களால்*
*சிவந்த ஊதா நிறச் சூரிய அஸ்தமனத்தை*
*நிதமும் பார்க்க விடுங்கள்.*
*உங்கள் குரலைக் கேட்க என் காதுகளுக்கு*
*கூர்மையைக் கொடுங்கள்.*
*எங்கள் மக்களுக்குக் கற்பித்தவைகளை,*
*ஒவ்வொரு இலையிலும், ஒவ்வொரு பாறையிலும்*
*ஒளித்துவைத்த போதனைகளை*
*நான் அறிவதற்கு எனக்கு ஞானத்தைக் கொடுங்கள்.*
*ஓ என்னைப் படைத்தவரே,*
*நான் பலத்தைத் தேடுகிறேன். ஏன்?,*
*என் சகோதரர்களிலும் பார்க்க*
*மேலானவனாக இருப்பதற்கல்ல.*
*என் மிகப் பெரும் எதிரியான*
*என்னை நான் வெல்வதற்கு.*
*சூரியன் அஸ்தமிப்பது போல*
*என் வாழ்வு மங்கும்போது*
*தூய்மையான கைகளுடனும், நேரான கண்களுடனும்*
*என் ஆன்மா எந்த அவமானமும் இன்றி*
*உங்களிடம் வருவதற்கு என்னைத் தயாராக்குங்கள்.*
□

## *மீண்டும் நோர்வேயில்....*




*நோர்வேயில் புதிதாய் 1144பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்துக்கு பின் ஒரே நாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய தொற்றுக்கள் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை கொரோனா தொற்று நோயாளிகள் 30பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர் எனவும் நோர்வே சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.*


*அமெரிக்காவில் 5 முதல் 11 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு பைசர்(Pfizer) தடுப்பூசி போடலாம் என அமெரிக்க மருத்துவ நிபுணர் குழு அறிவித்துள்ளது. 28 மில்லியன் அமெரிக்க சிறார்களுக்கு தடுப்பூசி வழங்கல் விரைவில் ஆரம்பிக்கபடலாம் எனவும் கூறப்படுகிறது.*

# பிரமிடுகள் சிதையும் போது...

## The colonel's lady - Short story - William Somereset Maugham

ஆண்கள் எப்படி
வேண்டுமானாலும் இருக்கலாம்,
எத்தனை காதலிகளோடும்
வாழலாம் என்ற எண்ணம்
கொண்ட கேணலுக்கு
தன் மனைவியையும் ஒருவன்
காதலித்தான் என்பதைக்
கற்பனை செய்துகூடப் பார்க்க
அவர் மனம் விரும்பவில்லை.

-கவிதா லட்சுமி.




கணவன் மனைவி என்ற இரு கதாபாத்திரங்களை மையமாகக் கொண்ட இந்தக் கதை ஆண்-பெண் நுண்ணுணர்வுகளைப் பற்றிப் பேசுகிறது.
கேணல் ஜோர்ஜ் பெரிகிரின் உயரமான திடகாத்திரமான, கம்பீரமான தோற்றமுடையவன். அவனது மனைவி எவி மெல்லிய உடல்வாகும், சாதாரண அழகும், அழகை மேம்படுத்திக் காட்டாத இயல்பான தன்மையும் பொறுமையும் மிக்கவள்.
விருந்தினர்களை உபசரிப்பதிலும் வீட்டை அழகுபடுத்தி நிர்வகிப்பதிலும் வல்லவள். அவர்களுக்குக் குழந்தை இல்லை. அந்த வீட்டில் அவர்கள் இருவர் மட்டுமே வாழ்கின்றனர்.
அவர்கள் வாழும் அவ்வூரில் கேணல் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு மனிதராக இருக்கிறார். இந்நிலையில் கேணலின் மனைவி புனைப்பெயரில் ஒரு கவிதை நூல் வெளியிடுகிறாள். இந்தப் புள்ளியிலிருந்தே கதை தொடங்குகிறது.

எப்பொழுதும் தன் மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத கேணலுக்கு அவள் கவிதை எழுதி அதையும் புத்தகமாக வெளியிட்டிருக்கிறாள் என்பதே நகைப்புக்குரியதாக இருந்தது.

மேலும் அப்படி என்ன பெரிதாக எழுதிக் கிழித்திருப்பாள் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது. ஆனால் கேணலின் எண்ணத்திற்கு மாறாக எல்லோரும் எவியின் கவிதைப்

புத்தகத்தை கொண்டாடத் தொடங்கி இருந்தனர். காதலின் நுண்ணுர்வுகளை இப்படி யாரும் பல காலங்களாய்க் கவிதையில் சொல்லியதில்லை என அவள் கவிதைகளை வியந்தோதினர்.

இலக்கிய உலகமும் அவள் கவிதைகளையும் அவளையும் கொண்டாடிக் கொண்டது.
கேணலின் மனைவி என்று அறியப்பட்ட எவி இப்போது கவிஞர் எவி என்று மரியாதையாக அழைக்கப்பட்டாள். எல்லோரும் கேணலை இவர்தான் எவியின் கணவர் என்று சொல்லத் தொடங்கினர்.

கேணல் ஜோர்ஜ் பெரிக்ரினுக்கு தன் மனைவியின் செல்வாக்கு ஒருவித ஒவ்வாமையையும் சினத்தையும் உண்டாக்குகிறது. எப்படி இருந்தாலும் ஆணுக்கு அடங்கியவள் தான் பெண் என்னும் கருத்தில் அசைக்க முடியாத எண்ணமுடையவராகத் தான் கேணல் எவியை நடத்தி வந்தார். அதனாலேயே அவள் எழுதிய கவிதைப் புத்தகத்தை அதுவரை படிக்காமல் இருந்தார்.

அவளுடைய எதுவும் உதாசீனத்தோடே பார்க்கப்பட்டு வந்த நிலையில், அவர் படிக்கப் போவதில்லை என்று தெரிந்து அவர் மேசையிலிருந்த நூலை அவளே அகற்றிவிட்டிருந்தாள்.

பலரின் கருத்துக்களினால் ஆவல் கொண்ட கேணல், லண்டன் சென்றிருந்தபோது தன் மனைவி எழுதி இருந்த கவிதைப் புத்தகத்தைத் தேடி வாங்கிப் படித்துப் பார்க்கிறார். முதலில் படித்த போது அவருக்கு எதுவும் புரியவில்லை. இதையா சிறந்த கவிதைகள் என்று கொண்டாடுகிறார்கள் என வியப்படைந்தார்.

அவர் அறிவுக்கு எட்டிய கவிதைகள் போல அல்லாமல் ஏதோ கிறுக்கல்கள் போல இருப்பதாக உணர்ந்தாலும் கவிதை வரிகள் ஒரே அளவில் இருப்பதைப் பார்த்து தனது பள்ளிப் பருவ கவிதை போல சற்று இருப்பதால் திருப்தி கொள்கிறார்.

ஆனாலும் ஏன் கொண்டாடுகிறார்கள் எனப் புரியாமல் மீண்டும் மீண்டும் படிக்கிறார். கேணலுடைய கருத்துக்களைப் போல் அல்லாமல் அவரைச் சுற்றி உள்ள மனிதர்களும், இலக்கிய விமர்சகர்களும் கவிதைத் தொகுதியின் கனதியைப் பற்றிப் பேசுகின்றனர். கவிதை பேசும் காதல் உணர்வுளில் ஆழ்ந்து காதலாகி கசிந்து போகின்றனர்.

இதையெல்லாம் பார்க்கும் போது கேணலுக்கு இது தன்னுடைய மனைவியின் காதலாக இருக்குமோ என்ற எண்ணம் மெல்லத் துளிர்விட்டு ஒரு பெரிய மனப்போராட்டத்தை அவருக்குள் ஏற்படுத்தி விடுகிறது.

ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், எத்தனை காதலிகளோடும் வாழலாம் என்ற எண்ணம் கொண்ட கேணலுக்கு தன் மனைவியையும் ஒருவன் காதலித்தான் என்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அவர் மனம் விரும்பவில்லை.



ஆண் என்றால் இப்படித்தான் கேளிக்கைகளை விரும்புபவனாகவும், நிறைய பெண்களோடு தொடர்புகள் வைத்திருப்பதற்கு நியமம் கற்பித்தாலும் தனது மனைவியை ஒருவன் காலித்திருக்கக் கூடும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுவும் மிகச் சாதாரணமான அழகுள்ள, வசீகரமற்ற, எந்த ஒப்பனையும் செய்து தன்னை முன்னிலைப் படுத்தாத தனது மனைவியிடம் என்னதான் இருந்திருக்கக்கூடும் என்ற கேணலின் எண்ணம்
கதையை ஆண் மனத்தின் சொல்ல முடியாத போராட்டத்தை, ஆணாதிக்க மனோபாவத்தை ஆண் மனத்தின் இருண்ட பகுதியில் வெளிச்சம் பாய்ச்சுகிறது.


மேலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியாத சூழலில் அன்றாட வாழ்வை நகர்த்தும் ஒரு அறிவார்ந்த பெண்ணின் நுண்ணுணர்வுகளையும் மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

கவிதைத் தொகுப்பில் காதலன் இறந்துவிடுகிறான். அவன் யாராக இருக்கக் கூடும் என்பதை கேணலைப்போலவே நமக்கும் ஆவல் மிகுகிறது.
பிறருடைய நுண்ணுணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத மனிதர்கள், தமது நுண்ணுணர்வுளைப் பகிர்ந்து கொள்ள முடியாத வாழ்க்கைக்குள் இருக்கும் மனிதர்கள் என அவரவர் பரிதாபங்களும் பாவப்பட்ட வாழ்தல்களுமாய் சில பக்கங்களில் பேசப்படும் 'The Colonel's Lady' என்னும் இச் சிறுகதை வில்லியம் சோமர்செட் மாமின் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்று.

காப்புரிமை காரணமாக இணையத்தில் இவரது கதை-களைப் பெறுவது கடினம். நூலாக மட்டுமே வாங்கிப் படிக்க முடியும்.
எவியின் கவிதை நூலின் தலைப்பு: பிரமிடுகள் சிதையும் போது... □



# வட்டுக்கோட்டையில் இருந்து ஜெனீவா வரை...



## மூன்று அம்ச கோரிக்கைகள்

- வட்டுக்கோட்டையில் இடம் பெறும் சாதிய வன்முறைகளுக்கெதிராக அரசு சட்டரீதியான நடைமுறைகளை உறுதிப்படுத்த வேண்டும்.
- வட்டுக்கோட்டை முதலியகோயிலடி பகுதியில் இடம்பெற்ற முதியவர்களுக்கெதிராக வாள்வெட்டில் ஈடுபட்ட மிகுதி நபர்களும் உடனடியாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் தமிழர்களுக்கிடையிலான சாதிய வன்முறைகளை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்குவதனூடாக மனித சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

*19.09.2021இன் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரான தாக்குதல் குறித்து பல முற்போக்கு சக்திகளும், பொதுமக்களும் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்து வருவதோடு, கண்டனங்களைத் தெரிவிக்கும்பொருட்டு ஆங்காங்கே சாத்வீகப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாகப் பல காணொளிகளும் ஊடகப் பொதுவெளிகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.*
*எமக்குக் கிடைத்த சில பதிவுகளிலிருந்து தோழர் சிறிதரன் திருநாவுக்கரசு(சுகு) அவர்களுடைய உரையை அப்படியே இங்கு பதிவு செய்கிறோம். -பானுபாரதி-*




இப்படியான எதிர்பியக்கங்கள், போராட்டங்கள், மகஜர் கையளிப்புக்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் இந்தச் சமூகத்துக்குள்ளே சாதி புரையோடிய விசயமாக இருந்தாலும், அறுபதுகளில இதற்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக இருந்தது. எண்பதுகளின் முற்பகுதியில் நாங்கள் உட்பட, ஒரு போராட்ட பாரம்பரியம் இருக்கு. ஆனால் பிரச்சனை என்னவென்றால் உலகம் இவ்வளவு முன்னேறிய பிறகும், உலகக் கிராமம் என்று சொல்லப்படுகின்ற காலத்திலும் இதைப் பராமரிக்கின்ற போக்கு இருக்கின்றது. சொல்வதற்கு மன்னிக்க வேணும். எங்கட மீடியாக்களில எனக்குப் பிரச்சனை இருக்கிறது. ஜெனீவா மனித உரிமை என்று பேசுவதற்கு இருக்கிறதுதானே?, இங்க ஊருக்குள்ள மனித உரிமை இல்லாமல், ஒருபகுதி மக்களின் உரிமையை காலில் போட்டு மிதித்துக் கொண்டு ஜெனீவாவில என்ன கதைக்கப் போகினம். மனித உரிமை என்றது என்ன? இதுதான். அமெரிக்காவில ஒரு கறுப்பினத்து இளைஞனின் குரல்வளை மிதிக்கப்பட்டு அவர் என்னால் சுவாசிக்க முடியவில்லை என்ற

*விடயம் உலகம் முழுக்க பரவியது. இங்க ஒரு பொய்யான வாழ்க்கை இருக்கு. இங்க செத்ததும் சரி, போராட்டத்துக்குப் போனதும் சரி சாதாரண, கஸ்ரப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின்ர பிள்ளைகள். இவ்வளவு பேர் செத்ததுக்குப் பிறகும் இவ்வளவு பேரழிவுகள் நடந்தாப் பிறகும் இண்டைக்கும் இந்த விசயம் இங்க இருக்கு. இது ஒரு முன்னேறிய சமூகத்துக்குள்ள விசயம் இல்லை.*

*மற்ற இடங்கள் நான் சொல்லமாட்டன். மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி. ஓரளவிற்கு இருக்கு. ஆனா இங்க இது மோசமாக இருக்கு. இப்படியொரு பாசிச மனநிலையை வச்சுக் கொண்டு, (நான் இதை பாசிச மனநிலை என்றுதான் சொல்லுவன்) இது அரசியலிலும் வந்தது. இதிலயிருந்துதான் சகோதரப் படுகொலை பெண்ணொடுக்குமுறை எல்லாம் தீண்டாமையிலிருந்துதான் வருகிறது. வெளியில பெரிய பண்பாட்டு நகரம் என்று சொல்லிக் கொள்கிறம். என்ன பண்பாடு இங்க இருக்கு? இங்க சாதிபண்பாடுதான் இருக்கு.*

*எனக்கு ஒரு தோழர் சொல்லுவார்(சுகன்) நாங்களிங்க வெளிநாடுகளில வெள்ளக் காரனை-யோ வெள்ளைக் காரியையோ, அல்லது மற்ற சமூகத்து ஆக்களையோ கட்டிக் கொண்டு போயிடுவம். நாங்கள் எதுக்கு இந்தப் பண்பாட்டைக் காவிக் கொண்டு திரிய வேணும்.? சரியான கேள்வி இது. தமிழ்ப்பண்பாடு எண்டு இங்க வச்சிருக்கினம். தமிழ்நாட்டில கூட பெரியாரியமும் அம்பேத்காரியமும் செல்வாக்கு செலுத்துற விசயமாக இருக்கு.*

*இங்க வந்து இந்தப் போராட்டம் மிகமு க்கியமான முன்னெடுப்பாகத்தான் இருக்கு. இந்த விளக்கு கொளுத்துறது, இந்தப் பம்மாத்துகள விட இது முக்கியமானது. மனித உரிமை பற்றிப் பேச வேணும், ஆனால் எங்கட சமூகத்துக்க ஒண்ட வைச்சுக் கொண்டு பாசாங்காக மனித உரிமை பற்றிப் பேசக் கூடாது. எங்க கலியாணவீடு செத்தவீடு நடந்தாலும் அவையள் மற்றாக்கள், இப்படிக் கதைச்சுக் கொண்டுதான் இருக்கினம். ஆகவே இது உடைய வேணும். உடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கு. புலம்பெயர்வு ஒண்டு நடந்ததில எனக்கு ஒரு விருப்பம் இருக்கு, ஏனென்டால், புலம்பெயர்வுக்குள்ளால வெவ்வேறு சமூகங்களோட கலந்து பழகும்போது இது உடையுது. நாங்கள் தூய்மைவாதம் பேச முடியாது.*

*முஸ்லீம்களை சகிக்க மாட்டம், சிங்கள மக்களை சகிக்க மாட்டம். எங்கட சமூகத்தில சொந்தமாக வாழ்ற மக்கள சகிக்க மாட்டம். வேற பிரதேச மக்களை சகிக்க மாட்டம். பொம்பிளயள சகிக்க மாட்டம் எண்டு சொல்லிக் கொண்டு மனித உரிமை பேச முடியாது. அது சுத்த போலித்தனமும் பம்மாத்தும் எண்டுதான் நான் சொல்லுவன். நீங்க போய்ச் சாதாரணமாக ஒரு நன்மை தீமை கதைக்கிற இடத்தில இருந்து பாருங்கோ. என்னவெல்லாம் கதைப்பினம் எண்டு. வாயோரியாக வரும், இயல்பா வரும். இங்க வன்முறையாக வந்திருக்கு. இந்தக் கலாச்சாரம் உடைய வேணும். இது ஒரு நிலப்பிரபுத்துவக் கலாச்சாரம். இங்க வந்து ஒரு நகர் மயமாக்கல் நடக்க வேணும். நிலச் சீர்திருத்தம் நடக்க வேணும். எல்லாரும் புலம் பெயர்ந்து போனபடியால நிலப்பிரச்சனை இருக்கு. ஒரு சமூக எழுச்சி நடக்க வேணும். எங்கட தமிழ்த்தலைவர்கள் எதைப்பற்றிப் பேசினம்? ஜெனீவாவைப் பற்றி பேசினம் அல்லது தீர்வைப்பற்றிக் கதைக்கினம்.*


*தீர்வைப் பற்றிக் கதைக்கிறதுக்கு முதல் இங்குள்ள மக்களைப் பற்றி சமத்துவமாக நடத்தத்தானே வேணும். அது என்னெண்டால் கதைக்கச் சுகமான விசயத்தைக் கதைக்கிறது. சமூக பொருளாதார விசயங்களை பற்றிக் கதைக்கிறேல்ல. சமூகத்துக்கு நீதியில்லாத விசயங்களப்பற்றிக் கதைக்கிறேல்ல. அதனால நாங்கள் சொல்கிறோம். இதற்கு எதிராக ஒரு இயக்கம் இயங்கிக் கொண்டே இருக்க வேணும். ஏற்கனவே சொன்னதுபோல இந்தப்பிரச்சனை வெவ்வேறு இடங்களில வெவ்வேறு வடிவங்களில நடக்குது. உதாரணமா வடமராட்சி, கம்பர்மலயில நடந்திருக்கு. கந்த ஆறு மாதகால பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும். ஆனால் இந்தப் பிரச்சனை உடைந்து போகாதவரைக்கும் இந்தச் சமூகம் உருப்படாது.* □






மீனவர்கள் வருவார்கள். அப்பொழுது அவர்கள் அரசியல் எல்லைகளை மதிப்பதில்லை. தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான கடல் எனப்படுவது இரு பகுதி மீனவர்களாலும் பகிரப்படும் ஒரு பாரம்பரியக் கடலாகும். அதில் பாரம்பரிய மீன்பிடி முறைகளின் மூலம் மீன் பிடிக்கப்படும் வரை பிரச்சினை பெரியளவில் எழவில்லை. மாறாக சட்டத்துக்கு விரோதமான நவீன மீன்பிடி நுட்பங்களைப் பயன்படுத்தும் ஒப்பீட்டளவில் அளவால் பெரிய தமிழகப்படகுகள் ஈழத்துக் கடற்பரப்புக்குள் நுழைந்த போதுதான் அது முதலாவதாக வள அபகரிப்பாக மாறுகிறது. இரண்டாவதாக சூழலியல் விவகாரம் ஆகிறது. மூன்றாவதாக சட்டவிரோதமான முறை-களைப் பயன்படுத்துவதால் அது ஒரு சட்டப்பிரச்சினையாக மாறுகிறது.இவை அனைத்தினதும் தொகுக்கப்பட்ட விளைவாக அது இருதரப்பு மீனவர்களுக்கும் இடையிலான மோதலாக மாறுகிறது.

ஆனால் அது தனிய மீனவர்களுக்கிடையிலான ஒரு விவகாரம் அல்ல. அது ஒரு காலத்தில் பாரம்பரிய கடலாக இருந்தாலும் இப்பொழுது சர்வதேச கடல் எல்லையால் பிரிக்கப்படுகிறது. எனவே அது அரசுகளின் கடல் எல்லை பற்றிய ஒரு விவகாரம். அதனால் அதனை தீர்த்துக் கொள்ள வேண்டியது இருதரப்பு அரசுகளும்தான் இது முதலாவது. இரண்டாவதாக கடற் சூழலுக்கு தீங்கான முறைகளின் மூலம் மீனைப் பிடிக்கும் பொழுது அது சுற்றுச்சூழல் பொறுத்து சட்டப் பிரச்சினை ஆகிறது.




அதற்குரிய சட்டங்களை இயற்றி மீனவர்களை சட்டத்துக்கு பணிய வைப்பதும் அரசுகளின் பொறுப்புத்தான். ஆனால் இதில் சம்பந்தப்பட்ட அரசுகள் இரண்டும் விவகாரத்தை தங்களுடைய மட்டத்தில் தீர்த்துக் கொள்ளவில்லை என்பதுதான் இங்கேயுள்ள பிரச்சினை. அதனால் அது மீனவர்களின் பிரச்சினையாக வெளிப்படுகிறது. அதை மீனவர்கள் மட்டும் தீர்த்துக் கொள்ள முடியாது. தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் மீனவப்பிரதிநிதிகள் அமர்ந்திருக்க வேண்டும். ஆனால் முடிவெடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அரசுகள்தான். ஏனென்றால் அது அனைத்துலக எல்லைகள் சம்பந்தப்பட்டது. எனவே, அரசுகள் முடிவெடுக்க வேண்டிய ஒரு விடயத்தை மீனவர்களின் தலையில் சுமத்திவிட்டு பாரம்பரியமாக ஒரே கடலைப் பகிர்ந்த மீனவர்களை இப்பொழுது எதிரிகள் ஆக்கியிருக்கிறார்களா?

தமிழக மீனவர்கள் ஈழப் போராட்டத்துக்காக தாயகத்துக்கு வெளியே ரத்தம் சிந்திய ஒரு தரப்பாகும். தமிழக மீனவர்களின் ஆதரவு இல்லாமல் ஈழத்தமிழர்கள் போராடியிருக்கவே முடியாது. தமிழகம் ஈழப்போராட்டத்தின் பின்தளமாக செயற்பட்டபொழுது அப்பின்தளத்திற்கு கடல் வாசல் மட்டுமே இருந்தது. தரை வாசல் இருக்கவில்லை. வான் வாசலும் இருக்கவில்லை. ஏனென்றால் அப்பின்தளமானது சட்டப்பூர்வமானது அல்ல. இதனால் அக்கடல் வாசலின் முன்னரங்கச் செயற்பாட்டாளராக, இடைத் தொடர்பாளராக, இறங்கு துறையாக, இன்னபிறவாக இருந்தது தமிழக மீனவர்கள்தான்.

போராட்டத்திற்குத் தேவையான வழங்கல்கள் தொடக்கம் காயக்காரரை ஏற்றி இறக்குவது வரையிலும் அவர்களுடைய பங்களிப்பு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருந்திருக்கிறது. ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகள் தமிழகத்தை நோக்கி சென்ற காலத்தில் உதவியதும் தமிழக மீனவர்கள்தான்.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழக மீனவர்கள் பலர் கொல்லப் பட்டிருக்கிறார்கள். காயப்பட்டிருக்கிறார்கள் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 800க்கும் குறையாது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு ஈழத் தமிழர்களுக்காக ரத்தம் சிந்திக்காயப்பட்ட கொல்லப்பட்ட தொழிலை, சொத்துக்களை இழந்த ஒரு சமூகத்தை அதன் ஈழத்துச் சகோதரர்கள் பகைவர்களாக பார்ப்பது என்பது எங்கேயோ பிழை

நடப்பதைத்தான் காட்டுகிறது. ஒரு பாரம்பரிய கடலில் நிரந்தரமாக ஒரு பகை எல்லைக் கோட்டை வரைய விரும்பும் சக்திகள் கடந்த 12 ஆண்டுகளில் வெற்றி பெற்று வருவதைத் தான் காட்டுகிறது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் இருந்த கொஞ்ச நஞ்ச வளங்களோடு கடலுக்குப் போன ஈழத்து மீனவர்கள் கடலில் தமிழகத்தின் மிகப் பலமான ரோலர்களை எதிர் கொள்ள வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஒரு பாரம்பரிய கடலை பாரம்பரிய மீன்பிடி முறைகளின் மூலம் நுகரும் வரை அது ஒரு விவகாரமாக இருக்கவில்லை.

ஆனால் பாரம்பரிய முறைகளை கடந்து நவீன சட்டவிரோதமான முறைகளை கையாளும் ஒப்பீட்டளவில் பெரியபடகுகள் ஈழத்துக் கடலுக்குள் நுழைந்த போதே அது விவகாரமாக மாறியது. அப்பெரிய படகுகள் ஈழத்து மீனவர்களின் கடல் செல்வத்தை மட்டும் கவர்ந்து செல்லவில்லை, அதைவிட ஆழமான பொருளில் ஈழத்துக் கடலின் வளம் பொருந்திய கர்ப்பத்தையும் விறாண்டி செல்கின்றன.

இதனால் பாதிக்கப்பட்ட ஈழத்து மீனவர்கள், தமிழக மீனவர்களுக்கு எதிராகத் திரும்பும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது.



அண்மையில் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த ஒரு மீனவர் சங்கப் பிரதிநிதி இதை யாரும் தடுக்காவிட்டால் நாங்கள் மனிதக் குண்டுகளாக மாறி இந்திய மீனவர்களின் படகுகளை தகர்ப்போம் என்று எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை விகாரமடைந்து விட்டது. இந்த விவகாரத்தை தமிழ் அரசியல்வாதிகள் சிலர் பிரச்சினையின் ஆழத்தை விளங்கிக் கொள்ளாமல் கையாள முற்படுகின்றார்களா?

கடந்த 17.10.2021அன்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் தமது ஆதரவாளர்களுடன் மீனவர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஆனால் அந்தப்போராட்டம் அதிகம் மக்கள் மயப்படவில்லை. அதோடு, அந்தப் போராட்டம் பின்வரும் விடயங்களை நமக்கு உணர்த்தியிருக்கிறது.

முதலாவது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லை. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் அதற்குத் தலைமை தாங்கினார்கள்.அதாவது கூட்டமைப்புக்குள் ஐக்கியம் இல்லை என்பதனை அது உணர்த்தியிருக்கிறது.


இரண்டாவது தமிழரசுக் கட்சியின் தலைவர் அதில் பங்கு பற்றவில்லை. அவருடைய ஆதரவாளர்களையும் காணமுடியவில்லை. அதாவது தமிழரசுக் கட்சிக்கு உள்ளேயும் முரண்பாடுகள் உண்டு என்பதனை அது காட்டி இருக்கிறதா? அப்படிப் பார்த்தால் மீனவர்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் போராடப்போய்,
முடிவில் கூட்டமைப்புக்குள்ளும் ஐக்கியமில்லை, தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஐக்கியம் இல்லை என்ற செய்திகளை உலகத்துக்கும் சமூகத்துக்கும் உணர்த்துவதில்தான் முடிந்திருக்கிறதா?

அதுகூடப் பரவாயில்லை, கூட்டமைப்பு ஓர் ஐக்கியப்பட்ட அமைப்பாக இல்லை என்பது உலகறிந்த உண்மை. ஆனால் தங்களுக்குள் ஐக்கியப்பட முடியாத அரசியல்வாதிகள் போதாக் குறைக்கு ஒரு பிராந்திய உறவை மேலும் பகை நிலைக்கு கொண்டு போகும் விதத்தில் ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்களா? அப்போராட்டம் தமிழக மீனவர்களுக்கு எதிரானது அல்ல, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிரானதே என்று கூறப்பட்டாலும்கூட அது அதன் தர்க்கபூர்வ விளைவை கருதிக் கூறின், தமிழக மீனவர்களுக்கு எதிரானது தான். ஏனென்றால் தமிழக மீனவர்களிடமிருந்து ஈழத்து மீனவர்களை டக்ளஸ் தேவானந்தா காப்பாற்றவில்லை என்பதனால்தான் அவருக்கு எதிரான போராட்டம் என்ற அடிப்படையில் இறுதியிலும் இறுதியாக அந்தப் போராட்டம் தமிழக மீனவர்களுக்கு எதிரானதுதான். போராட்டம் நடந்து முடிந்த அடுத்தநாள் காரைநகர் கடலில் தமிழகப் படகொன்று மூழ்கடிக்கப் பட்டிருக்கிறது. இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் காணாமல் போயிருக்கிறார். தமிழ் அரசியல்வாதிகள் கடலில் இறங்கி எதிர்ப்பைக் காட்டிய அடுத்தடுத்த நாள் இது நடந்திருக்கிறது.



இந்த விடயத்தை மீனவர்கள் மட்டத்தில் தீர்க்க முடியாது. இதில் அனைத்துலக எல்லைகள் சம்பந்தப்படுகின்றன. தவிர சட்டவிரோத மீன்பிடி முறைகள் சம்பந்தப்படுவதால் இந்த பிரச்சினைக்கு ஒரு சட்ட பரிமாணமும் உண்டு. எனவே சட்டத்தை அமுல்படுத்தும் அரசுகள்தான் இந்த விடயத்தை பேசித் தீர்க்க வேண்டும். கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தோடு இணக்கமாக இருந்த காலகட்டத்தில் 2017இல் இது தொடர்பாக உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தை அமுல்படுத்துவதில் யாருமே அக்கறை காட்டவில்லை.
அச்சட்டத்தை அமல்படுத்தினால் ஒரு பகுதி மீனவ வாக்காளர்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பு அரசியல்வாதிகளும் அஞ்சினார்கள். இப்படித்தான் இந்தப் பிரச்சினை அதன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்கு போனது.

இதனால் பாதிப்பு யாருக்கு என்று சொன்னால் ஈழத் தமிழர்களுக்குத்தான். எப்படியென்றால்; சிறிய, தொழில்நுட்ப வளம் குறைந்த படகுகளை வைத்து மீன் பிடிக்கும் ஈழத்தமிழர்கள் இதனால் தொழிலை இழக்கிறார்கள் தொழிற் சாதனங்களை இழக்கிறார்கள். இது முதலாவது இழப்பு.




இந்திய, தமிழக இழுவைப் படகுகள் எல்லைதாண்டி வரும் பாதைகளைச் சிவப்பு அம்புக்குறிகள் சுட்டுகின்றன



இரண்டாவது இழப்பு; ஈழத்துக்குக் கடலின் கர்ப்பம் விறாண்டப் படுகிறது. பெரிய றோலர்கள் கடலின் கருவளத்தை விறாண்டி எடுக்கின்றன, ஈழத்து தமிழர்கள் நீண்ட கடல் எல்லையைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டம் அவர்களுடைய கடலின் கர்ப்பம் குலைந்தால் எல்லாமே குலைந்துவிடும்.

மூன்றாவது இழப்பு; ஈழத்தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையிலான பிராந்திய உறவு கனெக்ரிவிற்றி அறுக்கப்படுகிறது. இது நீண்ட எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களை பலவீனப்படுத்தும் எப்படியென்றால் ஒரு பாரம்பரிய கடலை தங்களுக்கிடையே பகிர்ந்த மீனவர்கள் பகைவர்கள் ஆக்கப்படும்பொழுது அது ஈழத்தமிழர்களை இலங்கைத் தீவுக்குள் குறுக்கி விடும்.

ஈழத் தமிழர்களின் பிரதான அரசியல் பலங்கள் இரண்டு. ஒன்று தமிழகம் மற்றது புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம். புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் பௌதிக ரீதியாக தொலைவிலுள்ளது. அருகே இருப்பது தமிழகம்தான்.

அதிலும் மிக அருகே இருப்பது தமிழக மீனவர்கள்தான்.

இந்தப் புவியியல் அருகாமை geographical proximity என்பது ஒரு முக்கியமான விடயம். ஈழத்த மிழர்களின் புவிசார் அரசியலானது மேற்படி புவியியல் அருகாமை-யின் அடிப்படையிலானது. அந்தப் புவியியல் அருகாமை காரணமாக தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இணைப்பு அதாவது கனெக்ரிவிற்றி என்பது நீண்ட எதிர்காலத்தில் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் இலக்குகளை அடைவதில் ஒரு முக்கிய காரணியாக செயல்படக்கூடியது.

சில வாரங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் அவரைச் சந்தித்த தமிழ் அரசியல் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் மத்தியில் பேசிய விடயங்களில் ஒன்று கனெக்ரிவிற்றி பற்றியதாகும். கலாச்சார இணைப்பு, வர்த்தக இணைப்பு உள்ளிட்ட எல்லாவிதமான இணைப்புகளைக் குறித்தும் அவர்பேசினார். அதில் அவர் மீள் இணைப்பு (re connectivity) பற்றியும் பேசினார்.

ஆனால் இரு மீனவ சமூகங்களுக்கு இடையிலான பகைமை என்பது அவ்வாறான இணைப்புகளை அறுக்கக் கூடியது. ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான இணைப்பை அறுக்கும் சக்திகளுக்கு தமிழ் அரசியல்வாதிகளும் சேவகம் செய்யக்கூடாது. இந்த அரசியல்வாதிகள் மக்களோடு சேர்ந்து ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முதலில் தமிழகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடும் தமிழக தலைவர்களோடும் பேசியிருக்கலாம்தானே? அப்படி ஒரு சந்திப்பை அவர்கள் ஏன் செய்யவில்லை? தமிழக அமைச்சர்களுக்கு ஒரு சர்வதேசக் கடல் எல்லை குறித்துப் பேச அதிகாரம் இல்லையென்றால் மத்திய அமைச்சரவையில் உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடு தமிழ்க்கட்சிகளின் தூதுக்குழு ஒன்று ஏன் பேச்சு நடத்தக் கூடாது?

எல்லாருமாக சேர்ந்து இரு மீனவர் சமூகங்களுக்கும் இடையிலான இணைப்பை அறுத்து ஈழத்தமிழர்களை தனிமைப்படுத்த முயலும் சக்திகளுக்கு சேவகம் செய்கிறார்களா? இப்பிரச்சினையை அதன் அனைத்துப் பரிமாணங்களுக்கூடாகவும் அணுகித் தீர்க்கவேண்டும். முதலாவதாக பாதிக்கப்படும் ஈழத்து மீனவர்கள். இரண்டாவதாக சிதைக்கப்படும் கடலின் கருவ-ளம். மூன்றாவதாக அறுக்கப்படும் இணைப்பு. அதாவது இது முதலாவதாக ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. இரண்டாவதாக சுற்றுச்சூழல் சார்ந்த ஒரு சட்டப்பிரச்சினை. மூன்றாவதாக ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் பொறுத்து கனெக்ரிவிற்றியை அறுக்கும் பிரச்சினை. இம்மூன்று பரிமாணங்களையும் விளங்கி அதை அதற்குரிய வழிகளினூடாக அணுக வேண்டும். சம்பந்தப்பட்ட இரண்டு அரசுகளுக்கும் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஈழத்து அரசியல்வாதிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் உண்டு. அதே பொறுப்பு தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவுச் செயற்பாட்டாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஊடகங்களுக்கும் உண்டு.

நன்றி: நிலாந்தன் இணையத்தளம்

# உயிரோடு உறவாடு

**வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்**

Dr. லிமலநாதன் MD PhD (Senior Consultant Cardiologist, Oslo, Norway)



*எனக்கு காச்சல், இருமல், தடிமன் வந்து ஒரு வாரத்தின் பின் சுகமாகியது. பின்னர் மீண்டும் சில நாட்களின் பின்னர் உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. உடல் முழுவதும் நோவாக உள்ளது. இரண்டு வாரம் இருமல் மருந்தும் குடித்தேன். இருமல் குறையவே இல்லை. என்ன செய்வது?*

இப்போது Influense நடக்கின்ற காலப்பகுதி மற்றும் கொரோனாவும் தொடர்ந்தும் பரவி வருவதால் முதலில் கொரோனா தொற்று உள்ளதா என பரிசோதிப்பது நலம். கொரோனா தொற்றில்லையென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் உங்கள் குடும்ப வைத்தியரை நாடி பக்ரீறியா தொற்று ஏற்பட்டிருக்கும் வாய்ப்புள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டும். பக்ரீறியா தொற்று ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் antibiotica பாவித்து குணமடைய வேண்டும்.

*எனக்கு இதய நோவு இருக்கலாம் என்று எனது வைத்தியர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவர்கள் எனக்கு இதய வால்வு நோயாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார்கள். இதய வால்வு நோய் என்றால் என்ன? மொழி அறிவு குறைவால் எனக்கு இங்கு விளங்கி கொள்ள முடியாது உள்ளது.*

உங்களுடைய தரவுகள் மேலோட்டமானவை. மேலதிக தரவுகளின்றி எழுந்தமானமாக பதிலளிப்பது மிகவும் தவறானது. ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்தி விடயங்களை முழுமையாக விளங்குவதும் தரவுகளை சேகரித்துக் கொள்வதும் அவசியம். இப்போதைக்கு உங்களைப் பரிசோதித்த வைத்தியரால் மட்டுமே விளக்கமான பதில் தரமுடியும்.

*எனது கணவர் நெஞ்சுக்குள் நோகிறது மூச்சு விட முடியாது உள்ளது என்று கூற, எனது தம்பியின் காரில் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றோம். உடனே சிகிச்சை செய்து காப்பாற்றி விட்டனர். ஆனால் நாங்கள் எமது காரில் கொண்டு சென்றது தவறு ambulanceஇனை அழைத்து இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள். எவ்வாறான கட்டங்களில் நாம் மருத்துவ அவசர ஊர்தியினை (அம்புலன்ஸ்) அழைக்க வேண்டும்*

நெஞ்சு நோவால் மூச்சுத்திணறல் என்பன மார்படைப்புடன் தொடர்புடைய அறிகுறிகளாகும். மார்படைப்பு ஏற்படும் போது இதயத்துடிப்பு நின்று உயிராபத்து நிகழ்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதனால் மருந்துகளும் நவீன முதலுதவி வசதிகளையும் கொண்ட மருத்துவ அவசர ஊர்தியில் பயணிப்பதே நோயாளிக்கு பாதுகாப்பானது. அத்துடன் அழைத்துச் செல்பவர்களும் தேவையில்லாத அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். பொதுவாக எந்த நோயாளியாக இருப்பினும் நிலமை பாரதுாரமாக இருக்கும்போது மருத்துவ அவசர ஊர்தியை அழைத்து அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று செயலாற்றுவதே சிறந்தது.




*Når jeg er sint,*
*blir jeg rød i fjeset.*

Thea (5år)



*Brann mann Bjønis er snill og*
*hjelper alle som trenger hjelp.*

Maren (5år)



*Jeg savner sommeren*

Martine (5år)

